DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178-2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். சிவக்குமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 10.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் அரசு ஈரோடு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பெருந்துறையில் சட்ட சார்ந்த மருத்துவராக நான் பணியாற்றி வருகிறேன். நான் 21.05.2021ந் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பணியில் இருந்தபோது வேளாங்கண்ணி காவல் நிலைய குற்ற எண் 168/2021 தொடர்புடைய இறந்துபோன குமார் என்ற 36 வயதுடைய ஆணின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேளாங்கண்ணி காவல் ஆய்வாளர் அவர்கள் முதல் நிலை காவலர் 261 ஸ்ரீதர் என்பவர் மூலம் கொடுத்து அனுப்பி வேண்டுகோள் கடித்தை பெற்று பிரேதத்தை காவலர் அடையாளம் காட்ட பெற்று 14.40 மணிக்கு பிரேத பரிசோதனை தொடங்கினேன். பிணவிறைப்பு, கழுத்து மற்றும் கை, கால் ஆகிய பகுதிகளில் காணப்பட்டது. பிரேத படிமம் பிரேதத்தின் பின்புறத்தில் காணப்பட்டது.

**வெளிப்புற காயங்கள்**

1. தையல் போடப்பட்ட கிழிந்த காயம் 5x1.5 cm அளவில் எலும்பின் ஆழத்திற்கு பின்பக்க தலையில் காணப்பட்டது.

2. தையல் போடப்பட்ட கிழிந்த காயம் 3x0.5cm தோளின் ஆழத்திற்கு இடதுபக்க உச்சந்தலையில் காணப்பட்டது.

**உட்புற காயங்கள்**

1. தலையில் தோளின் அடியில் 14x12cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது.

2. பின்பக்க தலையில் தோளுக்கு அடியில் 10x6cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது.

3. மண்டையோட்டின் உச்சியிலிருந்து அடிபகுதிவரை 17cm மற்றும் 11 cm நீளத்தில் உடைந்து காணப்பட்டது.

4. மூளையை சுற்றியுள்ள வெளிப்புற உறைக்கு அடியில் இரத்தபோக்குடன் காணப்பட்டது.

5. மூளையை சுற்றி இரத்தபோக்குகள் காணப்பட்டது.

6. மூளையில் இடதுபக்க முன்பகுதியில் 3x1cm கன்றிய காயம் காணப்பட்டது.

மேலே சொன்ன அனைத்து காயங்களும் இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் ஆகும். இரைப்பையில் 50மில்லி அளவில் மஞ்சள் நிறம் கலந்த பச்சை திரவம் காணப்பட்டது. மேற்கண்ட நபர் மழுங்கிய ஆயுதத்தால் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவால் மூளையில்

இரத்தபோக்கு ஏற்பட்டு இறந்துள்ளார் என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 ஆல் அடித்தால் இறப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. விசராவும், இரத்த மாதிரியை இரத்த வகையை கண்டறிய காவலர் ஸ்ரீதரிடம் ஒப்படைக்கப்பட்டது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த காயங்கள் அனைத்தும் வெவ்வேறு காலத்தில் ஏற்பட்டது என்று சொன்னால் ஒரே காலத்தில் ஏற்பட்டு இருக்கலாம். இறந்த நபருக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த காலத்தில் கொரோனா அதிகமாக இருந்த காலம் என்றால் நான் அவ்வாறு தான் நினைக்கிறேன். கொரோனா காலத்தில் போஸ்ட்மார்டம் செய்வதற்கு அதற்குரிய வழிகாட்டு முறையை பின்பற்றி போஸ்ட்மார்டம் செய்தீர்களா என்றால் போஸ்ட்மார்டத்திற்கு ஒரே மாதிரியான நடைமுறையை தான் பின்பற்றினோம். பாடியை காவல் துறையிடம் ஒப்படைத்துவிட்டோம் அவர்கள் தான் உரியவரிடம் ஒப்படைத்திருப்பார். எப்போதும் உள்ள பிரேதம் போல தான் இருந்தது.

(சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்பட்டது)